ந.க.எண்.இ3/21588/2024 ஆதிதிராவிடர் நல இயக்குநரகம்
நாள். .09.2024 சென்னை–05.

சுற்றறிக்கை

பொருள் : பணியாளர் தொகுதி – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – பள்ளிகள் – முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படும் 50% பணியிடங்களில் 2% பணியிடங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைகளில் பணிபுரியும் அமைச்சு பணியாளர்களை கொண்டு நிரப்பும் பொருட்டு – 01.03.2021 நிலையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரியும் அமைச்சு பணியாளர்களின் பணிமாறுதல் மூலம் முதுநிலை பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கு தகுதியுள்ள பணியாளர்கள் விவரங்களை அனுப்ப கோருதல் – தொடர்பாக.

பார்வை :
1. ஆதிதிராவிடர் நல இயக்குநரக குறிப்பு ந.க.எண்.எ1/1664/2023, நாள்.11.09.2024.
2. அரசாணை (நிலை) எண்.23, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந7)துறை நாள்.25.02.2015.

&&&&&

ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பழங்குடியினர் நலத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்களில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்படும் 50% பணியிடங்களில் 2% பணியிடங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரியும் அமைச்சு பணியாளர்களை கொண்டு நிரப்பும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையைச் சார்ந்த அமைச்சுப்பணியாளர்களுக்கு 01.03.2021 முதல் முதுகலைப்பட்டதாரி ஆசிரியராக பணிமாறுதல் பதவி உயர்வு வழங்க தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயார் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இத்துறையில் பணிபுரியும் அமைச்சுப்பணியாளர்களில் (கண்காணிப்பாளர்/ உதவியாளர்/சுருக்கெழுத்து தட்டச்சர்/இளநிலை உதவியாளர்/தட்டச்சர்) முதுநிலை பட்டதாரி ஆசிரியருக்கான கல்வி தகுதியும் (UG and PG Same Degree with B.Ed.,) விருப்பமும் உடைய பணியாளர்கள் விவரங்களை அனுப்புமாறு பார்வை 1–இல் கண்டுள்ள இவ்வலுவலக குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் பணிபுரியும் அமைச்சுப்பணியாளர்களில் பார்வை 2–இல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி முதுநிலை பட்டதாரி ஆசிரியருக்கான (ஒரே பாடப்பிரிவில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் இளங்கலை கல்வியாளருக்கான

(UG and PG Same Degree with B.Ed.,)) கல்வி தகுதியும், விருப்பமும் உடைய பணியாளர்களின் விவரத்தினை 24.09.2024-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.

பெறுநர்

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்,
அனைத்து மாவட்டங்கள்.